
பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 22 சனிக்கிழமை 09.12.2023 அதிர்வு 131

## நாடு முழுவதும் திடீர் மின் தடை

### மக்கள் பெரும் அசௌகரியம்



மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக நாடு முழுவதும் 04▶




# போர்க்காலத்தில் பிரபாகரனை நேரில் சந்திக்க மல்வத்துபீட மகாநாயக்க தேரர் விரும்பினாராம்

## இப்படி தம்மிடம் அவர் கூறினார் என்று உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் வைத்து இன்று தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“போர்க்காலத்தில் மல்வத்து பீட மகாநாயக்க தேரர் ஆறு தடவைகளுக்கு மேலாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க இலங்கை அரசுகள் ஊடாக முயன்றார் எனவும், ஆனால் அந்த விடயம் கைகூடவில்லை எனவும் அவர் எம்மிடம் கூறினார்.” 04▶



## தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகமே!

### ஆறு திருமுருகன் கவலை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. 04▶

## போர்க்குற்றவாளியான கோட்டாவை நாம் ஒருபோதும் சந்திக்கமாட்டோம்!

### உலகத் தமிழர் பேரவையினர் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இடம்பெற்ற தமிழருக்கு எதிரான பல்வேறுபட்ட போர்க்குற்றங்களோடு தொடர்புபட்டவர்



# யாழ். மறைமாவட்ட ஆயரை இன்று சந்தித்த உலகத் தமிழர் பேரவை!







**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன்,

"யாழ். மறைமாவட்ட ஆயரை இன்று மதியம் சந்தித்து அவருக்கு நாங்கள் மேற்கொள்ளவுள்ள இன நல்லிணக்கத்துக்கான வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக விளங்கப்படுத்தினோம். அவர் எமது திட்டத்தை நல்லதொரு திட்டம் எனவும், மக்கள் மயப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தைத் தான் வரவேற்கின்றார் எனவும் கூறினார். மென்மேலும் இந்தத் திட்டத்தைத் தொடர்ச்சியாகச் செயற்படுத்துமாறும் அவர் கோரினார்." – என்றார்.

# மன்னாரில் ஏற்படவுள்ள பேரழிவு; அரசும் இதில் சம்பந்தப்படுகிறதா?

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் கவலை

(மன்னார் நிருபர்)

மன்னாரில் ஏற்படவுள்ள மிகப்பெரிய அழிவுக்கு பின்னணியில் அரசும் உள்ளதா. அரசு இதில் சம்மந்தப்படுகின்றதா? என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் இன்று சனிக்கிழமை (9) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் தீவு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறது. அவற்றில் முக்கியமாகப் பாரிய மண் அகழ்வுத் திட்டம் மற்றும் எல்லை மீறிய காற்றாலை கோபுரங்கள் மற்றும் காடழிப்பு போன்றவை காணப்படுகின்றன.

எனினும் மண் அகழ்வு தொடர்பாக பல்வேறு விடயங்களை முன் வைக்க விரும்புகின்றோம். மண் அகழ்வில் ஈடுபடுகின்ற தொழிற்சாலைகள் சம்மந்தமாக விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்காக அரச தரப்பில் பல்வேறு முயற்சிகளை கடந்த வருடம் நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.




ஆனால் அரச தரப்பிடம் இருந்து இது வரை எந்த விதமான பதில்களும் எமக்குக் கிடைக்கவில்லை.

பல ஆண்டுகளாக மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் இந்த விடயம் தொடர்பாக வினாவிய போதும் விளக்கம் கோரிய போதும் எவ்வித பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை.

மன்னார் பிரதேச செயலகத்திடமும் நாங்கள் பல்வேறு விதமான விளக்கங்களைக் கேட்டிருந்த போதும் எவ்வித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக நாங்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள அரசை நாடினோம். விளக்கம் கோரிப் பல்வேறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் இதுவரை அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

ஏற்படப்போகும் மிகப்பெரிய அழிவில் அரசும் சம்மந்தப்படுகின்றதா? என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

அவற்றைத் தெளிவாக நாங்கள் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

29-12-2021 அன்று தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இதற்காக விளக்கம் கேட்டு நாங்கள் எழுதி இருந்தோம்.

அதற்காகான பதிலை 10-01-2022 அன்று வழங்கி இருந்தார்கள். கோரிய விளக்கங்களை வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர். ஆனால் எவ்வித பதிலும் இல்லை.

தொடர்ந்தும் பல தடவைகள் விளக்கம் கோரிக் கடிதம் எழுதி இருந்தோம். எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் எமக்குக் கவலையளிக்கின்றன. மன்னாரை மிகவும் ஆபத்தான நிலைக்குக் கொண்டு செல்கின்றனர்.

அரசிடம் பல்வேறு முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ள போதும் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.- என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரும் போராட்டம் நாளை

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரும் போராட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நீதிக்கான போராட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

# இலங்கையிலிருந்து அபுதாபிக்கு குறைந்த கட்டணத்தில் விமானம்!

இலங்கை மக்கள் அபுதாபி செல்லும் வகையில் குறைந்த கட்டணத்தில் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி எயார் அரேபியா விமான நிறுவனம் இந்த சேவையை ஆரம்பித்துள்ளது.

இதன் முதலாவது விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில்




தரையிறங்கியது. 158 பயணிகள் மற்றும் 08 விமான நிலைய ஊழியர்களுடன் எயார் அரேபியா 3 எல்-197 என்ற விமானமே தரையிறங்கியது.

இந்த விமானசேவை வாரத்தின் ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு இலங்கை வந்தடையும். அதே விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இரவு 08.30 மணிக்கு அபுதாபிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**போர்க்காலத்தில்...**

– இவ்வாறு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் இன்று தெரிவித்தார்.

உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது அவர்கள், மதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தனர்.

அத்துடன், நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லை ஆதீனம், யாழ். ஆயர் இல்லத்துக்கும் அவர்கள் விஜயம் செய்தனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை வழிபட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கைக்கு வருகை தந்து பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். அதேபோல் சர்வமதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

அவர்களைச் சந்தித்து தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்ற விடயத்தையும், நடந்த போர்க்குற்றங்கள் போன்றவற்றுக்குப் பொறுப்புக்கூறல் ஒரு முக்கியமான விடயம் என்றும், இலங்கை தொடர்பான வெளிநாடுகளின் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறியுள்ளோம். இவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அடக்கியதாக ஒரு பிரகடனத்தை ஜனாதிபதி மற்றும் ஏனையோரிடம் நாங்கள் கையளித்திருக்கின்றோம்.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மதகுருமார்களுடன் ஒன்றுசேர்ந்து 25 மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளோம்.

தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வை மக்கள் ஒன்றிணைந்து கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களது அடிப்படை நோக்கம்.

அரசியல்வாதிகளை நாம் சந்திப்பதன் நோக்கம், இப்படியான வேலைத்திட்டத்தை நாங்கள் செய்கின்றோம் என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும் என்பதற்காகவே. இதற்கு அவர்கள் குறை கூறக்கூடாது அல்லது குறை கூறும் அமைப்பாக எங்களை அவர்கள் பார்க்கக் கூடாது. குறிப்பாக இது அரசினுடைய வேலைத்திட்டம் அல்லது பௌத்தர்களுடைய வேலைத்திட்டம் என அவர்கள் குறை கூறக்கூடாது என்பதற்காக நாங்கள் அரசியல்வாதிகளுக்கும் திட்டத்தைத் தெளிவாகக் கூறுவோம்.

இதனை மக்கள் மயப்படுத்துவதே எமது நோக்கம் அதாவது மக்களே தீர்ப்புக் கூற வேண்டும் என்பதே எமது நோக்கம். அரசியல்வாதிகள் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளையும் சந்திக்கவுள்ளோம். அதாவது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர ஏனையோரைச் சந்திக்கவுள்ளோம்.

பலதரப்பட்ட சமூகத்தினரை நாங்கள் சந்தித்து வேலைத்திட்டத்தை மக்கள் மயப்படுத்தி மக்கள் மத்தியில் வருகின்ற தீர்வுகள்தான் நிரந்தரமாக இருக்கும் என நாங்கள் யோசிக்கின்றோம்.

குறிப்பாக அஸ்கிரிய பீடத்தினரை நாங்கள் சந்தித்தபோது பல விடயங்களை அவர்கள் கூறினர். அதாவது சகோதரத்துவம், சமதர்மம், சமாதானம் என்ற அடிப்படையில் வேலை செய்தால் இலங்கை என்ற இந்த நாட்டில் பிரச்சினைகள் இருக்காது. அப்படி அரசியல்வாதிகள் செய்வதில்லை. நீங்கள் இப்படி மக்களிடம் சொல்லப்போவதைத் தாம் வரவேற்கின்றனர் எனவும், நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் எனவும், அதனைத் தாம் வெளிப்படையாகவே கூறுகின்றனர் எனவும், அதற்குத் தாம் ஆதரவு தருகின்றனர் எனவும் கூறினர்.

அதேபோல் மல்வத்துபீட மகாநாயக்க தேரர், போர்க்காலத்தில் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தான் நேரில் சந்திப்பதற்காக ஆறு தடவைகள் அப்போதைய அரசுகளைக் கேட்டார் எனவும், அரசுகள் விடாதிருந்தபோது ஆறாவது தடவையாகத் தான் வவுனியா வரை பிரபாகரனைக் காண வேண்டும் என்று வந்தார் எனவும், ஆனால் அது கைகூடவில்லை எனவும் எம்மிடம் கூறினார்.

போர்க்காலத்தில் கூட ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டும், சமாதானத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற விடயத்தில் தாங்கள் ஈடுபட்டனர் எனவும், இப்படி மக்கள் மயமாகி அரசியல்வாதிகளைத் தவிர்த்து மக்கள் மூலமாக ஒரு தீர்வைக் காண முயற்சிப்பது ஒரு நல்ல நோக்கம் எனவும், தான் அதை ஆதரிக்கின்றார் எனவும், அதற்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றார் எனவும் மல்வத்துபீட மகாநாயக்க தேரர் கூறினார்.

போர் நிறைவடைந்த பின்னர் கிளிநொச்சி, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் மல்வத்துபீட தேரர்கள் பல பணிகளைச் செய்தனர் என்று புகைப்படங்களையும் மல்வத்துபீட மகாநாயக்க தேரர் எம்மிடம் காட்டினார்.” – என்றார்.

---

**போர்க்குற்றவாளியான...**

சர்வதேச சட்டதிட்டங்களைத் தட்டிக் கழித்தவர். எனவே, நாம் அவரை நேரில் சந்திக்க விரும்பவில்லை.”

– இவ்வாறு உலகத் தமிழர் பேரவையினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர், அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியவர், சர்வதேச சட்டங்களை மதிக்காது செயற்பட்டவர், நாட்டில் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும்போது மக்களின் எதிர்ப்பால் தப்பியோடியவர் என்பதன் அடிப்படையில் அவரைச் சந்திப்பது பயன் இல்லைதானே.

ஆனால், நாங்கள் ஏனைய அனைத்து அரசியல் தரப்பினரையும் சந்தித்து எமது நிலைப்பாட்டை விளக்குவோம்.” – என்றார்.

---

**நாடு முழுவதும்...**

மின் விநியோகம் இன்று பல மணிநேரம் தடைப்பட்டது.

இன்று மாலை 5.10 மணி முதல் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டது. இதையடுத்து மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இரண்டு மணித்தியாலங்களில் சீராகும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்தது. எனினும், இரவு 10.20 மணிக்குப் பின்னர்தான் பல இடங்களில் மின் விநியோகம் வழமைக்கு வந்தது.

இந்தத் திடீர் மின் தடையால் நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

---

**தமிழரின் பிரச்சினைக்கு...**

ஏனென்றால் சாதாரணமாக இந்துக்களின் பிரச்சினைக்குக் கூட தீர்வு கிடைக்காத நிலையில் தமிழருக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் என நம்ப முடியாத நிலை காணப்படுகின்றது.”

– இவ்வாறு தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்

உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் இன்று நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே ஆறு திருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

“இன்று நீங்கள் எல்லோருமாக இங்கே வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை? உங்களைப்போல் பலர் இங்கே வருகை தந்து சந்திப்புகளை மேற்கொள்கின்றார்கள், அவ்வாறே போய்விடுவார்கள். ஆனால் எந்த முடிவோ எந்தத் தீர்வும் எட்டப்படுவதில்லை.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கூட நீங்கள் இருக்கும் கதிரையில் இருந்து எம்மிடம் பல பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். நாங்களும் பல விடயங்களைக் கூறினோம். அவ்வாறே போய்விட்டார். எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. குறிப்பாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் திருப்பணிவேலைகளை செய்ய முடியாதுள்ளது. அங்கே பல இடர்பாடுகள்தொல்பொருள்திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றன .

அதேபோல் காங்கேசன்துறைப் பகுதியை எடுத்துக்கொண்டால் எங்களுடைய சித்தர்கள் இருந்த இடங்களை, புராதன கோயில்களை இடித்து ஜனாதிபதி மாளிகையைக் கட்டி விட்டு இன்று அந்த இடத்தை வேறு யாருக்கோ விற்க முற்படுகின்றார்கள். இது எல்லாம் பிழையான விடயம்தானே. ஏனென்றால் முதலில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போதுதான் எமக்கு ஒரு நம்பிக்கை வரும்.

தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவீர்கள் என்று இந்த விடயத்தை உடனடியாகக் கருத்தில் எடுத்து இதனைச் செயற்படுத்த நீங்கள் முன்வாருங்கள் பார்ப்போம். அதேபோல் இந்தப் பிரச்சினை தொடர்பில் அஸ்கிரிய பீடத்தினர் கூட இங்கே வருகை தந்து ஆதீனத்தைச் சந்தித்தபோது பல விடயங்களை எடுத்துரைத்தோம்.

ஆனால், அவை காற்றில் போய் விட்டன. அதேபோல் நீங்களும் போகக் கூடாது. நீங்களும் இந்த விடயங்களைக் கருத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

# பொலிஸ் உயர் மட்டத்தில் வருகிறது இடமாற்றங்கள்!

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் நான்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.பி கருணாரத்ன ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.ஆர். விஜேசிங்க கேஷேத்ர படைத் தலைமையகத்துக்கும், கேஷேத்ர படைத் தலைமையக மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த டி.பி.சந்திரசிறி காலி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ஹேமசிறி விசேட பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாகவும், கடல்சார் மற்றும் சுற்றுலா பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.சி வெதமுல்லவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேல்மாகாண சமூக பொலிஸ், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு முகாமைத்துவ மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச். சமுத்திரஜீவ கப்பல் போக்குவரத்து மற்றும் சுற்றுலாப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பரிசோதகர் நாயகமாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

செயல் டிஐஜி சி. அது புஷ்பகுமார, குறைகேட்புப் பிரிவில் இருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பான டிஐஜியாகவும், பிரதமரின் பாதுகாப்புப் பிரிவில் இருந்து பதில் டிஐஜி எஸ்.பி. டி. சில்வா பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான டிஐஜியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் கணினி குற்றப் பிரிவு இயக்குநராக மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் ஏ.டி. குமாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் 08 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# வெளிநாட்டு வேலை தருவதாகக் கூறி நிதி மோசடி செய்த பெண் கைதானார்!

தென்கொரியாவில் வெல்டிங் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஒரு கோடி 65 லட்சம் ரூபாவை மோசடியாக பெற்ற பெண் ஒருவர் நேற்று (8)வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கந்தானை - நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கு உரிய பெண்ணுக்கு எதிராக 15 முறைப்பாடுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் சந்தேகத்துக்குரிய நபரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பின்னர் பணியகத்துக்கு அழைத்து அவரை கைது செய்தனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கூற்றுப்படி, தென் கொரியாவின் வெல்டிங் துறையில் வேலைகளை வழங்குவதற்கு ஒரு சில வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு மட்டுமே அங்கீகாரம் உள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு அவ்வாறான அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வலியுறுத்தியுள்ளது. சந்தேக நபர் இன்று (09) நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார்.

# 97 வகையான பொருள்களுக்கு வரி விதிக்க யோசனை முன்வைப்பு

இதுவரை வற் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டிருந்த 138 வகையான பொருள்களில் 97 வகையான பொருள்களுக்கு வரி விதிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்துக்கு நேற்று சபை ஒத்திவைப்பு வேளையில் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பல வற் விலக்குகள் வழங்கப்படுவதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீதத்துக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதை பெற வேண்டும். அதனால்தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள 138 பொருள்களில் 97 பொருள்களுக்கு வரி விலக்கை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீத வருமான அதிகரிப்பு அதாவது 378 பில்லியன் ரூபா வருமானம் பெற முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது நாட்டின் தேவை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வடலி வளர்த்து.....!

யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டு காலமாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு, நல்லிணக்கம் என்று தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் காதில் பூச்சுற்றி காலத்தை இழுத்தடித்து வரும் சிங்களம், அதன் மற்றொரு அத்தியாயத்தை இப் போது கட்டவிழ்க்கின்றது. அதைக் காட்டியே இன்னும் சில வருடங்களைப் பிரச்சினையின்றி இழுத்தடிக்கலாம் என்பது அதன் தந்திரமாக இருக்கும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) என்ற பெயரிலான கட்ட மைப்பு உட்பட பல ஆணைக்குழுகளையும் நிறுவனங்களையும் அவ்வப்போது அமைப்பதாகக் காட்டியே பல வருடங்களை ஓட்டியது கொழும்பு அரசு.

பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய ஆலோசனைப் பணிக்குழு உள்ளிட்ட கடந்தகால ஆணைக்குழுக்கள் வழங்கிய பரிந்துரைகளை மீளாய்வு செய்யவும், பரிசீலிக்கவும் மற்றும் நடைமுறைப்படுத்தவும் என்ற பெயரில் இன்னோர் ஆணைக்குழுவை நிறுவி காலத்தை ஓட்டியது.

இப்போது அந்த ஆணைக்குழுவால் முன்மொழி யப்பட்ட புதிய சட்டம் இயற்றப்பட வேண்டிய நிலையில் அது நிலுவையில் உள்ளதால், அந்தச் சட்டம் குறித்து ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற் காக 'உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக் கான இடைக்கால செயலகத்தை' இடைக்கால அமைப்பாக அரசாங்கம் நிறுவத் தொடங்கியுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக் கப் பொறிமுறைகள் பற்றிய ஆலோசனை பணிக் குழு உள்ளிட்டவை வழங்கிய பரிந்துரைகளை ஆராய்ந்து முடிவு செய்ய ஓர் ஆணைக்குழு, தொடர்ந்து அந்த ஆணைக்குழு பர்ந்துரைத்த மற்றோர் சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற் கான சட்டத்தைத் தயாரிக்க ஓர் அலுவலகம் என்று விடயங்கள் இறப்பர் வார் போல வலிந்து இழுத் தடித்து நீளுகின்றன.

சுருக்கமாகச்சொல்வதானால் -

இவ்விடயத்தில் இதுவரை இயங்கிய ஆணைக் குழுக்கள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் வழங்கிய பரிந்துரைகளை ஆராய்வதற்கென்று நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது சிபாரிசில் குறிப்பிட்டமைக்கு இணங்க 'நிலைமாறுகால நீதி மற்றும் மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு வரலாற்றுப் படியாக, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழு'வை நிறுவ அரசாங்கம் தீர்மானித் துள்ளதாம்.

முன்மொழியப்பட்ட ஆணைக்குழு நாடாளு மன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்படும் என்றும் அதற்காக தற்போது வரைவுச் செயல்பாட்டில் தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோ சித்து ஒரு கருத்துரு ஆவணம் தயாரிக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. அதற்கான செயலகம்தான் இப்போது வருகின்றதாம்.

அதாவது, உதாரணத்தில் இதை விளக்குவது என்றால், வடலி வளர்த்து கள்ளுக் குடிக்கும் திட்டம் இது!

பல்வேறு ஆணைக்குழுக்கள் பரிந்துரைத்த சிபாரிசுகள் யாவை என்று ஆராய ஓர் ஆணைக்கு ழுவை நியமித்து காலத்தை ஓட்டினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்த ஆணைக்குழு இப்போது பரிந்துரைத்துள்ள புதிய சுயாதீன ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். அதை எப்படி உருவாக்குவது என்ற விடயங்களை ஆராய்வதற்கு ஓர் செயலகத்தை இப்போது சட்டத்தின் மூலம் நிறுவப்போகிறார்களாம்.

நிறுவப்பட ஆலோசிக்கப்படும் உத்தேச சுயாதீன ஆணைக்குழு எந்தவொரு அரசியல் செல்வாக்கின்றி யும் நடுநிலையுடன் செயற்படுவதை உறுதி செய் வதில் உறுதியாக இருப்பதாக அரசாங்கம் தெரிவித் துள்ளது. பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட நெறிமுறையுடன், முன்மொழியப்பட்ட ஆணையம் குரல்கள் கேட்கப்படுவதற்கும், வலியை ஒப்புக்கொள்வதற்கும், கண்ணியத்தை மீட்டெடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மூடுதலை வழங்குவதற்கும், தேசிய ஒற்றுமை மற்றும் சமூக ஒற்றுமைக்கான பாதையை வகுப்பதற்கும் ஒரு புகலிடமாக இருக்குமாம்.

அந்த சுயாதீன் ஆணைக்குழுவை அமைப்பதற்கு முன்மொழியப்பட்ட புதிய சட்டம் இயற்றப்படுவ தற்கு நிலுவையில் உள்ள நிலையில், உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக் கால செயலகத்தை இடைக்கால அமைப்பாக அரசாங்கம் நிறுவத் தொடங்கியுள்ளது என்று அரசு கூறுகின்றது.

விடிந்த மாதிரித்தான்....!

# பாலக்காடு மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோ வில் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய பாலக்காடு கிராமத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழ்வாழும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் அமைப் பின் ஏற்பாட்டில் லண்டனில் வசிக்கும் பரோபகாரி ஒருவர் வழங்கிய நிதியுதவி மூலமே இந்த உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு இரண்டு பயிற்சி

(சப்னா றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாராணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு இரண்டு பயிற்சி அக்கரைப்பற்று அஸ் ஸிறாஜ் மாகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் இரண்டு நாள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பாசறைக்கு திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப் பற்று ஆகிய கல்வி வலயங்கலிருந்து சுமார் ஐம்பது ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

சாரணியத் துறையில் உயர் பயிற்சிகளைப் பெற்ற வாளவாளர்க ளைக் கொண்ட பயிற்சி குழுவினரால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்று பயிற்சிக் குழு தலைவரும், மாவட்ட சாரண ஆலோசாகருமான யூ.எல்.எம்.ஹாசிம் தெரிவித்தார்.



# பாலமுனை மாணவர்களுக்குக் கௌரவம்

(எம். எப். நவாஸ் )

பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் க. பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்ற மாணவிகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் பி.முஹாஜரின் தலைமையில் நடை பெற்றது.மாணவிகள் பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு, மாலை அணிவிக்கப் பட்டு, மாணவர்கள் புடை சூழ வரவேற்கப் பட்டனர்.

இந்தப் பரீட்சைக்கு தோற்றிய 44 மாணவிகளில் 40 மாணவிகள் உயர் தரம் கற்பதற்குத் தகமை பெற்றுள்ளனர். மூன்று மாணவிகள் அனைத்து பாடத் திலும் ஏ தர சித்திகளை பெற்றுள்ளனர்.

# பொது மக்கள் பார்வைக்கு கல்முனை மாநகர 'பட்ஜெட்'

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத் திட்ட அறிக்கை பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் பிரதான அலுவலக முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த வரவு- செலவுத் திட்ட அறிக்கையை அலுவலக நேரத் தில் பொது மக்கள் பார்வையிட முடியும்.

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் தொடர்பிலான தமது கருத்துகளை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.



# தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் காரைதீவில் நல்லிணக்கக் கலாச்சார நிகழ்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

இனங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்க கலாச்சார நிகழ்வொன்று அண்மையில் நடை பெற்றது.

காரைதீவு பிரதேச செயலர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு இராம கிருஷ்ணன் பெண்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள், சிறுவர் மகளிர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள், காரைதீவு, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச மாணவர்கள் கலந்து கொண்டனர் .

போட்டிகளில் வெற்றி பெற்ற மாண வர்களுக்கு விருந்தினர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தனர்.

# நுணாவில் அ. த. க. மாணவர்கள் சாதனை



(த.சுபேசன்)

தேசிய மட்ட பரத நாட்டியம் மற்றும் கர்நாடக சங்கீதப் போட்டிகளில் கைதடி, நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட புத்தாக்க நடன போட்டியில் “கற்றல் சுமை” என்ற தலைப்பில் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மாணவிகள் முதலாம் இடத்தையும் தனி இசை நிகழ்வில் “பதம்” எனும் தலைப்பில் செல்வன் து.ரஜிசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுப் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நிந்தவூரில் மரம் நடுகை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனையிலும் வழிகாட் டலிலும் நிந்தவூர் ஆதார வைத் தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி.வாஜித் தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிஉத்தியோஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தாதிய உதவியாளர் கற்கையை பூர்த்தி செய்தோருக்குப் பட்டம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிக்குடி சிலோன் தாதியர் பயிற்சி கல்லூரியில் தாதிய உதவியாளர் கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவ மாணவிகளுக்கான தொப்பி அணிவித்து பட்டமளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி கிறீன்கார்டின் விடுதியில் நடைபெற்றது.

கல்லூரியின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜே.முரியா டிலாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர். எஸ்.சிறீதரனும், கௌரவ அதிதிகளாக முன்னாள் பிரதி அமைச்சர் பிரபாகணேசன், கிழக்கு மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். கே.மோகனகுமார், பிராந்திய சுகாதார ஓய்வுபெற்ற பணிப்பாளர் டாக்டர் திருமதி நவரெட்ணராஜா, கல்முனை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஆர்.முரலீஸ்வரன், மட்டக்களப்பு பிராந்திய பொலிஸ் பரிசோதகர் உஜித் என். பி லியனகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிலோன் தாதியர் கல்லூரியின் தாதிய மாணவ மாணவிகள் 100 பேருக்கு தொப்பி அணிவிக்கப்பட்டுப் பட்டமளிக்கப்பட்டது.











# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை அல் பஹ்றியா தேசிய பாடசாலையின் 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கத் தெரிவு பாடசாலை அதிபர் எம்.எஸ். எம்.பைசால் தலைமையில் இடம் பெற்றது.

தலைவராக பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால், உப தலைவராக எஸ்.எம்.ஏ.அஸீஸ், பிரதித் தலைவராக யூ.எல்.அரபாத், செயலாளராக யூ.எல். எம். ஹாஜா, உப செயலாளராக கே.எம்.அஸ்ஹர், பொருளாளராக எஸ்.என். ஹஸ்மி, உப பொருளாளராக எஸ்.இஸட். எம்.சுனூஸ், இணைப்புச் செயலாளராக பீ. ருக்ஸான், கணக்குப் பரிசோதகராக யூ.கே. லாபிர், ஊடக இணைப்பாளர்களாக யூ.எல்.றியால், ஏ.தாரிக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏ.எஸ்.றம்சீர், எஸ்.எம்.ஸ ீத்,ஏ.எல்.எம். ஹனிபா ஹாஜி, எஸ். எல்.தன்சீல், எம்.ஐ.எம். ஜஹான்,ஏ.ஜே. எம். ஆசாத்,ஏ.ஸி.முத்தகீம், எஸ்.எஸ். எஸ். றிஸ்வான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



# அறிவிப்பாளர் போட்டியில் கல்முனை மாணவி தெரிவு!

(அஸ்ஹர் ஆதம்)

தேசிய இளைஞர் விருதுகள்- 2023 இற்கான அறிவிப்பாளர் போட்டியில், நிந்தவூர் கல்முனை அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் தரம் 13 உயிரியல் பிரிவைச் சேர்ந்த முகம்மட் றாவூ பாத்திமா ஷியாசத் மிப்றா என்ற மாணவி தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று இந்த வருடத்துக்கான சிறந்த இளம் அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட 15 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் மத்தியில் நடத்தப்படும் போட்டித் தொடரிலேயே தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்

இவர் மாவட்ட, மாகாண மட்டங்களில் முதலிடம் பெற்று கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு, மகரகம தேசிய இளைஞர் சேவைகள் கலையகத்தில் இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டியில் இலங்கையின் பிரபல ஊடகங்களின் இளம் அறிவிப்பாளர்களோடு போட்டியிட்டிருந்தார்.

அண்மையில் வெளியாகிய இதன் உத்தியோகபூர்வ முடிவுகளின் அடிப்படையில் இந்த வருடத்துக்கான சிறந்த இளம் அறிவிப்பாளருக்குரிய தேசிய விருதை இம்மாணவி தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இவ்வருடம் தமிழ் மொழி மூலம் இவ் இளைஞர் விருதைப் பெறும் ஒரே ஒரு பாடசாலை மாணவி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் மகரகம தேசிய இளைஞர் அரங்கில் இடம்பெற்றது.

இவ்விழாவின் போது தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சித் தொகுப்பின் அறிவிப்பை நிகழ்த்துவதற்கான வாய்ப்பும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

# வந்தாறுமூலையில் சங்கீத, நடன நிகழ்வுகள்!

(க.கிருபாகரன் )

2023 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 06 ஆம் திகதி 250 மாணவர்களின் சங்கீத நடன நிகழ்வுகள் ஊடாக யோகா கலைக்கதம்ப நிகழ்வு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் புதன்கிழமை (06) இடம் பெற்றது.

கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் த.ஆனந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதான நோக்கம் இலை மறை காயாக ஒளிந்து கிடக்கும் கல்குடா வலய மாணவர்களது ஆற்றலையும், மற்றும் சங்கீத நடன பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களது திறமையையும் வெளிக்காட்டுவதாகும்.

இதேவேளை 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி கலைக்கதம்பம் நிகழ்ச்சி செங்கலடி மத்திய கல்லூரியில் 450 சங்கீத நடன பாடம் கற்கும் மாணவர்களால் மேடை யேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் கலைக்கதம்பம் நிகழ்வு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.









# கல்முனை ஸாஹிரா பாடசாலையில் கடேட் மாணவர்களுக்குப் பாராட்டு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கடேட் மாணவர்கள், தேசிய மாணவ சிப்பாய்கள் படையணி ரன்தம்பே பயிற்சி நிலையத்தில் கணிப்பீட்டு முகாமில் பங்கு பற்றியமைக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் மேஜர். கே. எம். தமீம் வழிகாட்டலிலும் தலைமையிலும் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஹானி நிறுவனத்தின் பணிப்பாளர், பொறியியலாளர் ஏ.எம். சித்தீக் பரீட் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக பாடசாலையின் அதிபர் எம். ஐ. ஜாபிரும் விசேட அதிதிகளாகக் கல்லூரியின் பிரதி அதிபர் எ.எச்.எம். அமீன், எ.எல். எம். தன்ஸீல், கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளர் டாக்டர். எம்.எச்.கே. ஷனூஸ், 17 ஆவது படைப்பிரிவின் பயிற்சி அதிகாரி கப்டன் எம்.டி.நௌஷாத், 38 ஆவது படைப் பிரிவின் அதிகாரி எம். எம். எம். ஹாசிக், பாடசாலையின் விளையாட்டு பொறுப் பாசிரியர் எம்.ஐ.எம். அமீர், ஒழுக்காற்று சபையின் பொறுப்பாசிரியர் யு.எல்.எம். இப்ராஹிம், பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் யூ.எல்.எம்.ஹிலால், பாடசாலையின் பழைய கடேட் மாணவ சங்கத்தின் தலைவர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம் அதன் பிரதிநிதிகள், பகுதித் தலைவர்கள், பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# நடனப் பயிற்சிக் கல்லூரி மன்னாரில் அங்குரார்ப்பணம்

(மன்னார் நிருபர்)

மன்னார் டாஸ்லிங் டைமன் நடன பயிற்சி கல்லூரியின் இரண்டாவது நடனப் பயிற்சிக் கல்லூரி மன்னார் நகர் பகுதியில் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகர் பகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளின் நடன திறமைகளை மெருகூட்டும் விதமாகவும் சிறுவர்களுக்கு நடனப் பயிற்சி யை வழங்கும் முகமாக இந்த நடனப் பயிற்சிக் கல்லூரி மன்னார் நகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



டாஸ்லிங் டைமன் நடனப் பயிற்சிக் கல்லூரியின் நிறுவனர் அர்ஜுன் லெம்பேட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன், ஓய்வு பெற்ற அதிபர் ஸ்ரான்லி டிமேல் , ஒஸ்ரியா நிறுவன மன்னார் கிளையின் முகாமையாளர், தொழில் அதிபர் துஷி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் டைமன் டான்ஸின் பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளில் பல்வேறு நடன நிகழ்வுகள் இடம் பெற்றன.

# முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஒன்றியம் உதயம்

(கற்பிட்டி எம்.எச்.எம்சியாஜ்)

நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் ஒன்று கூடல் மாத்தளையில் இடம் பெற்றது. இதில் நாடு முழுவதும் பணி யாற்றும் முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் 45 பேர் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை உரிய முறையில் கையாள்வதற்கும் முஸ்லிம் ஜனாஸ ாக்களை துரிதப்படுத்தி குடும்பத்தின ரிடம் ஒப்படைத்தல் உள்ளிட்ட இன்னும் பல பணிகளை முன்னெடுக்கும் நோக்கோடு அகில இலங்கை முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஒன்றியம் அங்குரார்ப்பனம் செய்யப் பட்டது.

ஒன்றியத்தின் தலைவராக கிண்ணியா பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ் ஷாபி மௌலவியும், செயலாளராக புத்தளம் மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி பி.எம் ஹிஸாம், பொருளாராக அக்குரனை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எல் ரி.ஜே.வசீர் ஆகியோர் ஏகமனதாக தெரிவுசெய்யப் பட்டனர்.

# மத்ரஸா மாணவன் உயிரிழப்பு: மௌலவிக்கு 14 நாள் மறியல்!

(பாறுக் ஷிஹான்)

மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை (8) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் சம்சுதீன் முன்னி லையில் விசாரணைக்கு எடுத்து கொள் ளப்பட்டது.

பொலிஸாரின் நீண்ட சமர்ப்பணங் கள் உட்பட ஏனைய விடயங்களை ஆராய்ந்த நீதிவான் மௌலவியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.



சாய்ந்தமருது பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான மௌலவி மீரஸாகீபு முகமட் சனாஸ் (வயது-41) என்பவர் 2 பிள்ளை களின் தந்தையாவார்.

சுமார் 4 மணித்தியாலங்கள் வாக்கு மூலங்களை முன்னுக்கு பின்னாக மௌலவி வழங்கினார். இறுதியாகக் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத் தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி யிடம் அழைத்து செல்லப்பட்டார்.அங்கு உடற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார்.

# உப உணவு பயிர்ச் செய்கையில் அம்பாறை விவசாயிகள் ஆர்வம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் வேளாண்மைச் செய்கைக்கு மேலதிகமாக மேட்டு நிலங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் விவசா யிகள் அதிக ஆர்வம் செலுத்தி வரு கின்றனர்.

வருடத்தின் இரண்டு போகங்களின் போதும் வேளாண்மைச் செய்கைக்கு உட்படாத, நீர் வசதி குறைவாக கிடைக் கும் தரிசாக காணப்படும் காணிகளில் இந்த உப உணவுப் பயிர்ச் செய்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது.

இதன்படி சோளம், நிலக்கடலை, பாசிப்பயறு, கௌபி, உழுந்து போன்ற உப உணவுப் பயிர்களும், மிளகாய், வெங்காயம் போன்ற சுவையூட்டி பயிர்க ளும், மரவள்ளி, வற்றாளை உரு ளைக்கிழங்கு போன்ற கிழங்குப் பயிர்களும் தற்போது பயிரிடப்பட்டு வருகின்றன.

இதே வேளை சில பிரதேசங்களில் வீட்டுத்தோட்ட முயற்சியிலும் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களும் சிறந்த அறுவடையைப் பெற்று வரு கின்றனர்.



# சென்னையில் 43 இடங்களில் வெள்ளநீர் வடியவில்லை!

## கனமழை காரணமாக 16 பேர் உயிரிழப்பு



சென்னையில் 'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட கனமழையால் பெருவெள்ளம் ஏற்பட்டு 450 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்தது.

இதனால், அந்தப் பகுதிகளில் வசித்த பொதுமக்கள் குடிநீர், உணவு, மின்சாரம் இன்றி சில நாட்கள் தவித்தனர்.

கனமழைக்கு சென்னை வருவாய் மாவட்டத்தில் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் வேளச்சேரியில் பள்ளத்தில் விழுந்த கன்டெய்னரில் இருந்து 2 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றைய நிலவரப்படி பெரும்பாலான இடங்களில் வெள்ள நீர் வடிந்து வரும் நிலையில் இன்னும் 43 இடங்களில் வெள்ளநீர் வடியவில்லை என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், 488 பேருந்து தட சாலைகளில் 67 இடங்களில் மட்டும் மழைநீர்த் தேக்கம் இருந்து வருகிறது. இவற்றில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது 65 நிவாரண முகாம்களில் 14 ஆயிரத்து 268 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வாகனங்களின் மூலம் இதுவரை 47 லட்சத்து 79 ஆயிரத்து 222 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 1,512 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றில் 1,303 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 209 மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகின்றன.

மாநகரில் 22 சுரங்கப்பாதைகளும் தற்போது மழைநீர் தேக்கமின்றி போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

# விஜயகாந்துக்கு ஒக்சிஜன் உதவியுடன் தீவிர சிகிச்சை!



நடிகர் விஜயகாந்துக்கு தனியார் மருத்துவமனையில் ஒக்சிஜன் உதவியுடன் வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவால் சில ஆண்டுகளாக வீட்டிலேயே ஓய்வில் இருந்து வருகிறார். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

வீட்டில் ஓய்வில் இருந்த விஜயகாந்துக்கு இருமல், காய்ச்சல், சளி தொந்தரவுகள் ஏற்பட்டதால் கடந்த மாதம் 18 ஆம் திகதி சென்னை கிண்டியை அடுத்த மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கும் அவருக்கு சில நேரங்களில் சுயமாக சுவாசிப்பதில் சிரமம் இருந்ததால்அந்த நேரங்களில் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்தது.

இதற்கிடையே, விஜயகாந்த் உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டது. அவரை நுரையீரல் நிபுணர்கள் கண்காணித்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்தநிலையில், அவருக்கு முழுவதுமாக ஒக்சிஜன் உதவியுடன் மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# 'நீண்ட ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும்': சோனியாவுக்கு வாழ்த்து கூறினார் பிரதமர் மோடி



காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி இன்று தனது 77 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இந்த நிலையில் அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவராக இருக்கும் சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சியின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியவர்.

உடல்நலக்குறைவு காரணமாக சமீபகாலமாக தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். அவரது மகனும் வயநாடு எம்பியுமான ராகுல் காந்தி, மகள் பிரியங்கா வத்ரா ஆகியோர் காங்கிரஸ் கட்சியில் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இதேவேளை, சோனியா காந்திக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில்,

"அர்ப்பணிப்புமிக்க பொதுவாழ்க்கைக்கு அடையாளமாக விளங்கும் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்டகாலம் நல்ல உடல்நலத்துடன் திகழ விழைகிறேன்.

சோனியா காந்தியின் ஆழ்ந்த தொலைநோக்கும் அனுபவச் செல்வமும் எதேச்சாதிகார சக்திகளிடம் இருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் நம் ஒன்றிணைந்த முயற்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் தொடர்ந்து அமைந்திடட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம்: ஐ.நா. யோசனைக்கு அமெரிக்கா எதிர்ப்பு





ஐக்கிய அரபு இராச்சியத்தினால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முன்வைக்கப்பட்ட 'காசாவில் உடனடி மனிதாபிமான போர் நிறுத்தம்' என்ற தலைப்பிலான யோசனையை அமெ ரிக்கா தடுத்துள்ளது.

15 உறுப்பினர்களை கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அமெரிக்கா இந்த யோசனைக்கு எதிராக வாக்களித்ததுடன் பிரித்தானியா வாக்களிப்பில் இருந்து விலகியது.

இதன்படி, இந்த யோசனைக்கு ஆத ரவாக 13 வாக்குகள் அளிக்கப் பட்டன.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடான அமெரிக்கா தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி குறித்த யோசனையை தடுத்துள்ளது.

இதற்கமைய இந்த யோசனை தோல்வியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இந்த யோசனை, சம நிலையற்றது எனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக கருத்துரைத்த, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், காசாவின் நிலைமை மோசமடைந்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன், உலக நாடுகள் இதனை கண்காணித்து வருவதாகவும் தற்போது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய சந்தர்ப்பம் இதுவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# குண்டுத் தாக்குதல் காரணமாக 104 பள்ளிவாசல்கள் சேதம்!



காசாவின் ஒமாரி பள்ளிவாசல் மீது இஸ்ரேல் குண்டுவீச்சு தாக்குதல்களை நடத்தியதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொல்பொருள் சின்னங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்துவது குற்றச் செயலாகும் என காசாவின் சுற்றுலா மற்றும் தொல்பொருள் அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

பாரம்பரிய சின்னங்களை இஸ்ரே லின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப் பதற்கு, யுனெஸ்கோ அமைப்பு நடவ டிக்கை எடுக்க வேண்டும் என காசா வலியுறுத்தியுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 104 பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுவிட்சர்லாந்தில் வீட்டு வாடகை அதிகரிப்பு

சுவிட்சர்லாந்தில் வரலாறு காணாத அளவில் வீட்டு வாடகைகள் உயர்ந் துள்ளது. சுவிட்சர்லாந்திலுள்ள அனைத்து முனிசிபாலிட்டிகளிலும், இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வீட்டு வாடகை அதிகரித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் 85 முனிசிபாலிட டிகளில், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வீட்டு வாடகைகள் 3 சதவிகிதம் அதிகரித்துள்ளன.

அனைத்து மாநகர சபைகளையும் ஒப்பிடும்போது, சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் தான் அதிக அளவில் வாடகை உயர்ந்துள்ளது.







# நெற்பயிர்ச் செய்கையில் வெண்புழுத் தாக்கம்; விவசாயிகளை அவதானமாக இருக்க அறிவுறுத்து

(கி.வசந்தரூபன்)

வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கையில் வெண்புழுத் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளை அவதானமாக இருக்குமாறு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியாவில் நேற்று (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் நெற்செய்கையில் வெண்புழுத் தாக்கம் நோய் அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகப் பன்றிக்கெய்தகுளம் மற்றும் செங்காரத்தி மோட்டை பகுதிகளில் இதனை நாம் நேரடியாக அவதானித்தோம். எனவே வவுனியா மாவட்ட விவசாயிகளை எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தப் பூச்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் அதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெடுக்கவேண்டும். அனைத்து, விவசாயிகளும் ஒற்றுமையாக இதனை முன்னெடுக்கும் போதே அதன் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

எனவே, இரசாயண விடயங்களை தவிர்த்து இயற்கை முறையில் இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முதலில் முன்னெடுக்க வேண்டும். கடுமையான தாக்கம் ஏற்பட்டால் மாத்திரமே இரசாயணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அந்தவகையில், இராசயணங்களான டையோமெக்சிக்கம், 50 வீதம் நனையக் கூடிய தூளை 10 லீற்றர் நீரில் கலந்து பாவிக்கலாம். அல்லது பி.பி.எம்.சி. 35 மில்லி லீற்றர் அளவைப் 10 லீற்றர் நீரில் கலந்து பாவிக்கலாம்.

அல்லது டயோமெடோசான் 25 வீதம் நனையக் கூடிய குருனலை 3 கிராம் அளவில் 10 லீற்றர் நீரில் பயன்படுத்தலாம். அல்லது பிப்றோனின் 50 கிராம் 15 மில்லி லீற்றர் அளவில் 10 லீற்றர் நீரில் கலந்து பயன்படுத்தலாம்.

அத்துடன் இது தொடர்பாக மேலதிகமான தகவல்களைப் பெறுவதற்கு அருகில் உள்ள விவசாய போதனாசிரியர்களை நாடி அவர்கள் மூலமாக தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும்.-என்றார்.





# ஒலுவில் ஆஸ்பத்திரிக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக உறுதி தெரிவிப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் கூறினார்

(கே. எ. ஹமீட்)

முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும் , நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம் ஒலுவில் பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்கிருக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

ஆஸ்பத்திரியில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையால் ஒலுவில் வாழ் பொது மக்கள் பெற்றுக்கொள்ளும் சேவைகளின் தரத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது கேட்டறிந்தார்.

இங்குள்ள பொது மக்கள் சேவை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதனைக் கவனத்தில் எடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இவ் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள், அவசரமாக நிவர்த்தி செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த விடயங்களுக்கு உரிய தீர்வைக் குறுகிய தினங்களுக்குள் வழங்குவதாக அதிகாரிகள் கூறியதற்கு அமைவாக விடயங்களை பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தியதுடன், சேவை வழங்கும் வைத்தியர்கள், ஊழியர்களுடனும் சினேகபூர்வமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் ஒலுவில் பிரதேச பெரிய பள்ளிவாசலுக்கும் விஜயம் செய்தார். பள்ளிவாசலின் சுற்றுமதில் அமைத்தல், அதற்கான நிதி திரட்டும் விடயங்கள் தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெளிவுபடுத்தியிருந்தனர். இவ்விடயத்துக்குத் தன்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.